அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள் !

Written by - பதிவுகள் -
Thursday, 31 December 2020 21:21 - Last Updated Thursday, 31 December 2020 21:29

பதிவுகளின் வாசகர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்! உங்கள் இல்லங்களில் இன்பப்பூக்கள் பூத்திடட்டும்! உங்கள் எண்ணங்கள் யாவும் எண்ணியவாறே நிறைவேறிடட்டும்! ஆரோக்கியமான எண்ணங்களுடன், உடல் நலத்துடன் உங்கள் வாழ்க்கை தொடரட்டும்! சிறக்கட்டும்!

பிறப்பாய் ! சிறப்பாய் ! புதிய ஆண்டே !

கோவிட் இருள் ஒழிந்து எங்கும்
குதூகலம் பிறந்திட, சிறந்திட, ஒளிர்ந்திட
இன்ப மலர்கள் மலர்ந்திட, மணம் தனைப் பரப்பிட
ஆண்டு புதிது அவனியில் தோன்றிட
வாழ்க வாழ்க என்றே வாழ்த்துவோம்.
வாழ்க வாழ்க என்றே வாழ்த்துவோம்.
இருளே ! ஒளிந்து செல்வாய் தரணியில்.
ஒளியே வருகை தருவாய் அவனியில்.
இங்கு எத்தனை எத்தனை உயிர்கள்
இழந்தோம் ! இடரில், துயரில் ஆழ்ந்தோம்.
வறுமை வயிற்றை வாட்டிட வதக்கிட
வாடியோர் எத்தனை எத்தனை மனிதர் !
உழைப்பவர் வாழ்வில் இன்பம் பிறந்திட
பிறப்பாய் புதிய ஆண்டே சிறப்பாய்.
தீயவர் செயல்கள் தீய்ந்திட , ஓய்ந்திட
நல்லவர் செயலால் நானிலம் செழித்திட
மகிழ்ச்சி நிறைந்து மாநிலம் சிறந்திட
பிறப்பாய் புதிய ஆண்டே பிறப்பாய் !
சிறப்பாய் ! சிறப்பு ஆண்டே! சிறப்பாய் !
அனைவரும் அன்பினில் ஆழ்ந்திட, மூழ்கிட
நினைவினில் நல்ல எண்ணம் பெருகிட
பிறப்பாய் புதிய ஆண்டே பிறப்பாய் !
சிறப்பாய் ! சிறப்பு ஆண்டே! சிறப்பாய் !

1 / 1